பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.எம்.பி.

மலர்: 16] சென்னை: கார்த்திகை 15 (30—11—68) சனி ★ வெளியூர்: கார்த்திகை 16 (1—12—68) ஞாயிறு [இதழ்: 138

மதப்பிரசாரத்தின் பேரால் ரூ. 66 கோடி!

புதுடில்லி, நவ. 30—

1968 சனவரி முதல் நாள் நிலவரப்படி, இந்தியாவில் வெளிநாடுகளைச் சேர்ந்த 6,420 சமயப் பிரசார நிறுவனங்கள் இயங்கிவருவதாகவும், அவற்றில் காமன்வெல்த் நாடுகளைச் சேர்ந்தவை 2,624 என்றும், மற்ற நாடுகளைச் சேர்ந்தவை 3,796 என்றும் இந்த நிறுனங்கள் மூலம் 1967-ல் ரூ. 66.30 கோடி வரை வெளிநாட்டுப் பணம் இந்தியாவுக்கு வந்துள்ளதாகவும், மக்களவையில் உள்துறைத் துணையமைச்சர் சுக்லா தெரிவித்தார்.

கனவு நனவாகும் நன்னாள்!

பொற்காலம் காணப் புறப்படும் நாள்!

தமிழ் உள்ளங்கள் அண்ணாவை வாழ்த்தும் திருநாள்

இன்றொரு பொன்னாள்! தமிழ் மண்ணின் மறுவாழ்வில் புதியதொரு அத்தியாயம்!

அன்றொரு நாள் 'தமிழ்நாடு' என்று உலகம் நமையழைத்த பேரே, இனி, நம் நாட்டுக்கு என்றும் நின்று நிலைத்திருக்கும் -- என்று தமிழரெல்லாம் எண்ணி மகிழ்கின்றார்கள்!

முப்பதாண்டுகளுக்கு முன்னாலே தமிழ்த் தென்றல் பெரியார் திரு. வி. க. அவர்கள், மாநாடு ஒன்றில் தலைமையேற்றுச் சொற்பெருக்காற்றியபோது,

"என்னருமைத் தமிழ்நாடே — இதுபோழ்து யாண்டுள்ளாய்? என்று அலமருகிறேன். அவ்வுரிமை நாட்டை மீண்டும் காண எவர் முயலல் வேண்டும்? தமிழினத்திற் பிறந்த நாமல்லவோ முயலல் வேண்டும்? என் உடன் பிறந்த அருமைத் தமிழ் மக்களே! அந்நாட்டைக் காண வீறுகொண்டு எழுங்கள்!"

என்று உணர்ச்சி பொங்க விடுத்த அழைப்பைப் பாட நூல்கள் எல்லாம் பள்ளி மாணவரிடை நெஞ்சு நெக்குருகச் சொன்னதற்குப் பலன் கிடைத்துவிட்டது!

அந்தத் தலைமுறையின் -- தமிழார்வத்தின் தகத்தகாயத்தின் ஊடே பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமைதாங்கி வழிகாட்ட -- பழந்தமிழின் தாய்ப் பண்பு பூத்துக் காய்த்துப் பற்பல வகைகளில் கனிந்து இனிக்கும் 'தமிழ்நாடு' மலர்ந்திடும் நற்காட்சி, இந்தத் தலைமுறையின் பெரும் பேறு!

'தமிழாய்ந்த தமிழ் மகனே தமிழ்நாட்டின் முதலமைச்சராய் வருதல் வேண்டும்' என்று புரட்சிக் கவிஞரேறு பாரதிதாசன் கண்ட புத்தார்வக் கனவுகூட, 'அதன் விளைவாகத்தான் தமிழ்நாடும் **'தமிழ் நாடா'ய்** இலங்கும்; பின்னை, தமிழரும் தமிழராய் வாழ்வார்' என்பதால்தான்!

அந்தக் கவியார்வப் பெருங்கனவும் நனவாகும் நன்னாள் இது!

இந்தியாவின் பல்வேறு நாடுகளும் தனித்தனியே தமக்கென்று பண்புநிறை நற்பெயர்கள் புனைந்த காலை, தரங்கெட்டுத் தலை தாழ்ந்து 'பேடி'கள் போல் இங்கிருந்த அரசினத்தார் இருந்தார்கள்!

அதனாலே, திருவாங்கூர் – கொச்சி **கேரளமாய்** மலர்ந்தபோது -- **ஆந்திரம்** தனியாக அமைந்த காலை -- பம்பாயை மராட்டியர்கள் மாற்றிய நாளில் -- இன்ன பிற பேரெல்லாம் தத்தமது பழம் பெருமைப் பெயர்களையே பொறித்தபோதும் நாம் மட்டும் -- மன்னிக்க -- நம்மை அன்று ஆண்டார் மட்டும், **'மெதராஸ்'** எனச் சொல்லியே மகிழ்ந்தார்கள் -- பெருமையும் பட்டார்கள்!

அந்த நிலை, பொய்யாய்ப் பழங்கதையாய்ப் போயிற்று! அன்னவர்கள் ஆட்சியும் 'பொக்' கென்று விழுந்து புல் முளைத்துப்போயிற்று! 'தண்டமிழைச் சீரழிக்கச் செய்த முயற்சிகளெல்லாம் அவர்களோடே பொடிப் பொடியாய்ப் போனது' என்று தமிழரெல்லாம் இன்று கூடி இருக்கின்றார் --- கொட்டி முழக்குகின்றார்!

'தமிழ்நாடு -- தமிழரசு' காணத் துடித்தோரும், 'நாம் தமிழர் -- நாம் தமிழர்' என்று ஆர்ப்பரித்து மகிழ்ந்தோரும் இன்று உள்ளம் குளிர்ந்து, நிதானமாய் -- ஆனால் நிச்சயமாய் -- செயற்கரிய செய்யும் பேரறிஞர் அண்ணாவின் திறம் வியந்து, செயல் மறந்து வாழ்த்துகின்றார்கள்!

'தமிழால் முடியும்' என்று தலைநிமிர்ந்து அன்று பேசியவர்கள் கூட -- தாங்கள் சிக்கிக்கொண்ட குழப்பச் சேற்றிலிருந்து மீளமுடியாமல் மனம் வெதும்பியவர்கள்கூட -- இன்று உள்ளுக்குள் மகிழ்ந்து கொள்ளுகிறார்கள்; **அதற்குக் காரணமான திராவிட முன்னேற்றக் கழகத்தை நெஞ்சாரப் பாராட்டுகிறார்கள்.** (மேடைகளிலே அல்ல-- தங்களுக்குள்!)

இந்த நல்ல தீர்மானம் நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளில் இடம் பெற்றபோது, எதிர்ப்பின்றி அனைவருமே ஏற்று, 'ஆம்' என்று சொன்ன காட்சி, வரலாற்றில் புதுத் திருப்பம்!

இனித் தமிழர் பெருமையுடன் நடப்பார்கள்! இருந்து இழந்த பழம் புகழுக்கு ஈடாகப் புதுப் பெருமை சேர்ப்பதற்குச் சலிக்காமல் பணி செய்வார்கள்!

இப்படித்தான் மெல்ல மெல்ல, கழகத்தின் கருக்கொள்கை ஒவ்வொன்றாய் நிறைவேறி வருகிறது. அனைத்துமே நிறைவேறி, அன்பான பொன்னுலகம் -- தமிழுலகம் அமையும் நன்னாளை நோக்கி நடைபோடுவோம்! அதற்கு வழிகாட்ட அண்ணாவை வேண்டி நிற்போம!

—மு

'தமிழ்நாடு'

தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானம் நாடாளுமன்றத்தில் வந்தகாலை, 'நாடு' என்பதில் உள்ள 'டு'கரத்தை முழுமையாய் உச்சரித்து, அது சரியில்லை என்றும், 'நாட்' என்று சொல்லலாம் என்றும் ஓர் உறுப்பினர் கருத்து அறிவித்தாராம்.

தமிழ் மொழி மரபு அறிந்தவர்களுக்கு -- தமிழ் இலக்கணம் அறிந்தவர்களுக்குக் 'குற்றியலுகரம்' என்பது தெரிந்திருக்கும். நெடிலெழுத்துக்குப் பின்வரும் 'உ'கரம் அரை மாத்திரை அளவே பெற்று ஓசை குறைந்து நிற்கும்.

ஆடு, ஓடு, காசு ஆறு
காடு சாது பாகு

போன்றவற்றை எடுத்துக்காட்டலாம். இவற்றில் உகரத்தை நீட்டி உச்சரிப்பது வழக்கமில்லை. அதுபோலத்தான் 'நாடு'ம். அதுவே மொழி மரபுக்கு உகந்த சொல்.

— மு.

மானிய உதவி மறுப்பு

தமிழகத்திற்கு டில்லி கைவிரிப்பு

பூச்சிக் கொல்லி மருந்துக்குத் தரப்படும் உதவி படிப்படியாகத் திரும்பப் பெறப்படும்

தஞ்சாவூர், நவ. 30—

"பூச்சிக் கொல்லி மருந்துக்காகத் தரப்படும் மானிய உதவி நிறுத்தப்படும் என்று தமிழக அரசுக்கு மத்திய அரசு அறிவித்திருக்கிறது; எனவே, இந்த உதவியைத் திரும்பப் பெறுவதைத் தவிர, மாநில அரசுக்கு வேறு வழியில்லை"

என்று, வேளாண்மைத் துறை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி அவர்கள் தெரிவித்திருக்கிறார். இதுபற்றி அவர் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:—

"தற்போது பூச்சிக் கொல்லி மருந்துக்காக 35-சதவிகிதம் மானிய உதவி தரப்படுகிறது; இதனால் தமிழக அரசுக்கு ஒவ்வோர் ஆண்டும் ரூ. 10-இலட்சம் நட்டம் ஏற்படுகிறது.

"எனவே, பூச்சிக் கொல்லி மருந்துக்குத் தரப்படும் மானிய உதவியைப் படிப்படியாகத் திரும்பப் பெறத் தமிழக அரசு முடிவு செய்திருக்கிறது.

"ஒவ்வோர் ஆண்டும் 5-சதவிகிதம் என்ற அளவில் மானிய உதவி குறைக்கப்படும்."

தமிழக அரசின் சிறப்புத் திரைப் படம்

சென்னை, நவ. 30—

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள், உடல் நலச் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்று வந்தது பற்றிய சிறப்புத் திரைப் படம் ஒன்று தமிழக அரசு செய்தித் துறையால் நேற்று முதல் வெளியிடப்பட்டிருக்கிறது.

இப்படம் சென்னை நகரின் முக்கியமான தமிழ்த் திரைப் பட அரங்குகளிலும், மதுரை, சேலம், கோவை, திருச்சி ஆகிய இடங்களிலும் காண்பிக்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கட்கு ஊதிய உயர்வு

எதிர்கட்சியினர் கடும் எதிர்ப்பு

புதுடில்லி, நவ. 29—

"நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊதியத்தை மாதம் ரூ. 2,000-ஆக உயர்த்த வேண்டும்" என்று மாநிலங்களவையில் காங்கிரசு உறுப்பினர் எம். பி. பார்கவா கோரினார்!

இதற்கு வகைசெய்யும் தனியார் மசோதா ஒன்றை அவர் தாக்கல் செய்தார். இதில் பஞ்சப்படி, போக்குவரத்துச் செலவு, இதர செலவுகள் எல்லாம் அடங்கும்.

மசோதாவைத் தாக்கல் செய்தபோது உறுப்பினர்கள் அதை எதிர்த்தனர்; 'உறுப்பினர்கள் தங்கள் சொந்த நலனில்தான் அதிக அக்கறையுடன் இருக்கிறார்கள் என்று பொதுமக்கள் கருதுவதற்கு இது இடம் கொடுத்துவிடும்' என்று அவர்கள் சுட்டிக் காட்டினர்.

தொழிலகங்களுக்கு மின்சாரக் கட்டணம்

உயர்த்தும் எண்ணம் இல்லை

சென்னை, நவ. 30—

"தமிழகத்தில் தொழிலகங்களுக்கான மின்சாரக் கட்டணங்களை உயர்த்த தற்சமயம் கருதப்படவில்லை" என்று மாநில மின்சார வாரியத்தைச் சேர்ந்த ஓர் உயர்தர அதிகாரி கூறினார்.

"இப்போது தமிழகத்தில் விதிக்கப்படும் மின்சாரக் கட்டணங்கள் கேரளம், மைசூர் ஆகிய மாநிலங்களில் இருப்பதைவிட அதிகம்; ஆனால் ஆந்திரத்தில் இருப்பதைவிட, சென்னை நகரம் அதன் சுற்றுப்புறம் ஆகியவை நீங்கலாக மற்ற இடங்களில் சற்றுக் குறைவு" என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

உணவுத் துறையில் புரட்சி!

திருச்சி, நவ. 30—

"தமிழகத்தில் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றபின், கிராமப்புறங்களில் உணவுத் துறையில், 'புரட்சி' நடைபெற்று வருகிறது; விவசாயப் பெருங்குடி மக்களிடம் தனி மதிப்பு ஏற்பட்டிருக்கிறது!

"உழுபவர்களுக்கு அரசு, முதலிடம் கொடுத்திருக்கிறது; அவர்களுடைய குறைகளைத் தீர்ப்பதில் அரசு கண்ணுங்கருத்துமாக இருக்கிறது; விவசாயத்திற்கு மின்சக்தி இணைப்புத் துரிதமாகத் தரப்படுகிறது; நல்ல ரக விதைகளையும், இரசாயன உரங்களையும், கடன் உதவிகளையும் காலத்தே அளித்து வருகிறது!

"வயிறார உணவு -- வயலாற விளைவு -- விலைக் குறைப்பு ஆகிய மூன்றும் தமிழக அரசின் உணவுக் கொள்கைகளாகும்!"

—உணவுத்துறை அமைச்சர்
கே. ஏ. மதியழகன்
(திருமயம் தொகுதியில்)

நம்நாடு
இரா.செழியன்
திருவள்ளுவராண்டு 1999 கார்த்திகை 15 (30-11-68) சனி

'தமிழ்நாடு' பெயர் மாற்றம்-- தமிழருக்கு விழா நாள்!

ஏறத்தாழ இருநூறு ஆண்டுக்காலமாக, 'மெட்ராஸ் பிரசிடென்சி' என்றும், 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றும் வழங்கப்பட்டு வந்த தமிழ் வழங்கும் இம்மாநிலம், இனி, 'தமிழ்நாடு' என்ற இயல் பெயரால் அழைக்கப்படும்.

தமிழ் மக்களும் இம்மாநிலத்தை, 'தமிழ்நாடு' என்றுதான் அழைப்பர்; வெளிமாநிலத்தினரும், வெளிநாட்டினரும்கூட, 'தமிழ்நாடு' என்ற பெயரிட்டுத்தான் இம்மாநிலத்தை இனி அழைத்திடுவர்.

இம்மாநிலத்தை இனி வெளிநாட்டவர் ஒரு பெயரிலும், உள்நாட்டினர் வேறு ஒரு பெயரிலும் அழைத்திடமாட்டார்கள். அவ்வாறு அழைப்பதற்கு இதுவரையில் சட்டத்திற்குட்பட்டு இருந்து வந்த அவலநிலை, சட்டப்படி அகற்றப்பட்டுவிட்டது.

இம்மாநிலத்துக்குரிய 'தமிழ்நாடு' என்ற இயற்பெயரைப் பெறுவதற்காகத் தமிழக மக்கள் எடுத்த முயற்சியைக் குறைத்து மதிப்பிடுவதற்கில்லை.

இம்மாநிலத்தின் ஆட்சிப் பொறுப்பை நமது முன்னேற்றக் கழகம் ஏற்றுக்கொள்ளுகின்ற வரையில், 'தமிழ்நாடு' என்ற தமிழ் மக்களின் பெயர் மாற்றக் கோரிக்கையை, 'நியாயமான கோரிக்கை' எனக் கொள்கையளவில் ஏற்றுக்கொள்வதற்குக்கூட, இம்மாநிலத்தில் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பிலிருந்துவந்த தமிழ்நாடு காங்கிரசுத் தலைமை விரும்பவில்லை.

'தமிழ்நாடு' எனப் பெயரிட வேண்டும் என்ற கோரிக்கையைத் தீர்மான உருவில் சட்டப் பேரவையில், எதிர்க் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கொண்டுவந்தபொழுது, அதை ஏற்றுக்கொண்டு நிறைவேற்ற முனையாததுடன், அதை எதிர்க்கவும் செய்தனர் -- அன்றிருந்த காங்கிரசுக் கட்சியினர்.

இவ்வெதிர்ப்புக்கு மூலகாரணமாகவும் முன்னோடியாகவும் இருந்தவர், அன்று முதலமைச்சராக இருந்த காமராசர் அவர்களாவார்.

முதன் முதலாகச் சட்டப் பேரவையில், எதிர்க் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் சின்னதுரை அவர்கள், இப்பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கொண்டுவந்தபொழுது,

> **"இன்றைக்கு இருக்கக்கூடிய முறையில், 'மேட்ராஸ்' என்று சொல்லி வருகிறோம்; நமது அரசியல் அமைப்பில் 'மேட்ராஸ்' என்ற இடம் பெற்றிருக்கிறது. அதை மாற்ற வேண்டிய அவசியமில்லை எனற முடிவுக்குச் சர்க்கார் வந்திருக்கிறது"**

என்ற விளக்கத்தை அப்பொழுது காமராசர் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட காங்கிரசு அமைச்சரவையில் நிதி அமைச்சராக இருந்துவந்த சி. சுப்பிரமணியம் அவர்கள்தான் திருவாய்மலர்ந்தருளினர்.

'தமிழ்நாடு' எனப் பெயரை 'மாற்றவேண்டிய அவசியமில்லை' என அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் கூறிவிட்டாலும், 'தமிழ்நாடு' என்றப் பெயர் மாற்றக் கோரிக்கையில் பொதிந்து கிடக்கின்ற தமிழக மக்களின் மிதமிஞ்சிய உணர்ச்சியை ஒரே அடியாக அலட்சியப்படுத்திப் புறக்கணித்துவிட, காங்கிரசு அமைச்க்ரவைக்குத் துணிவில்லை.

தமிழக மக்களின் ஒருமித்தக் கோரிக்கையை ஒரேயடியாக உதறித் தள்ளிவிடுவதால் ஏற்படக்கூடிய அரசியல் பலாபலத்தைக் கணக்கிட்டு, தமிழக மக்களை ஏய்த்திட, நகைப்புத் தரக்கூடிய விசித்திரமான கருத்தொன்றை சுப்பிரமணியம் அவர்கள், அந்த நேரத்தில் வெளியிட்டார்கள். இதோ, அந்தக் கருத்து -- முடிவு :—

> "இன்றைக்கு அந்த அடிப்படையில், வெளியில் மற்றவர்களுக்கு ஆங்கில மொழியில் எழுதும்போதும் ஆங்கிலத்தில் பேசும்போதும், 'மெட்ராஸ்' என்று வைத்துக்கொண்டு, அதற்காக இப்போதுபோய் அரசியல் சட்டத்தை மாற்றிக்கொண்டிராமல், 'மெட்ராஸ் ஸ்டேட்' என்பதற்குத் தமிழில், 'சென்னை ராஜ்யம்' என்று எழுதுவதற்குப் பதில் 'தமிழ்நாடு' என்று எழுதுவது சட்டத்துக்கு விரோதமாக இருக்கப் போவதில்லை. இன்றைக்கு இப்போதுள்ள அரசியல் சட்டத்தை மாற்றவேண்டிய அவசியமில்லை."

'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றத்தைத் தாம் விரும்பி வரவேற்பதுபோலவும், அதற்காக அரசியல் சட்டத்தைத் திருத்துவதில் ஏதோ பெரும் சங்கடம் இருப்பது போலவும், அந்தச் சங்கடத்தைக் கருதியே தாம் மேற்குறித்த முடிவுக்கு வரவேண்டியதாயிற்று என்பது போலவும் தமிழக மக்கள் நம்பிக்கொள்ள வேண்டும் என்பதற்காக மேலே எடுத்துக்காட்டிய பொருளற்ற கருத்தைக் கூறிய அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் அந்த அளவுடனும் இருந்துவிடவில்லை; எதிர்காலத்திலும், 'தமிழ்நாடு' என்ற பெயர் மாற்றக் கோரிக்கையைக் கிளப்பத் தேவையில்லை என்றுகூட அறிவுரை கூறியுள்ளார்.

> "ஆகவே, இந்த முடிவை இந்தச் சபையும் ஏற்றுக்கொண்டு, இனிமேல் இந்தப் பெயர் வைக்கும் பிரச்சினையில் யாரும் அனுவசியமாக ஈடுபடத் தேவையில்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்."

இப்படி 1961 பிப்ரவரி 24-ம் நாள் தமிழகச் சட்டப் பேரவையில் ஆணை பிறப்பித்துவிட்டு, அடுத்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்துக்குத் தேர்வு செய்யப்பட்டு -- மத்திய அரசில் அமைச்சராகப் பொறுப்பேற்று -- புதுடெல்லிக்குச் சென்றுவிட்டார் சுப்பிரமணியம்.

1962 பொதுத் தேர்தலில் தி. மு. கழகத்தினர் ஐம்பதுபேர் வெற்றிபெற்று, நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் -- சட்டப் பேரவையில் -- அதிகாரபூர்வமான எதிர்க் கட்சியாக இடம் பெற்றனர். அந்த நேரத்தில் -- அதாவது 1964-ம் ஆண்டு சனவரி 24-ம் நாள் -- அரங்கண்ணல் அவர்கள், பின்வரும் 'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானத்தைச் சட்டப் பேரவையில் கொண்டுவந்தார் :—

> **"இந்தத் தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரும் தீர்மானம் 1961-ம் ஆண்டு இதே மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த செப்டம்பர் 6-ந் தேதியன்று டெல்லி ராஜ்ய சபையில், 'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் பூபேஷ் குப்தா அவர்கள் கொண்டு வந்தபோது, அதற்குப் பதிலளித்த மத்திய அமைச்சர், 'இந்தத் தீர்மானம் மாநில சர்க்காரிலிருந்து வரவேண்டும்' என்று கூறியதைக் கண்டபிறகே, நமது மாநில அரசுக்கு ஒரு கெட்ட பெயர் வந்துவிடக்கூடாதே என்பதற்கும், 'தமிழ்நாட்டிலிருக்கின்ற அத்தனைக் கட்சிகளும் — அத்தனை மக்களும் நல்ல காரியங்களைச் செய்யத் தயாராக இருக்கிறார்கள்' என்பதை எடுத்துக்காட்டவும் இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருக்கின்றேன்."**

அரங்கண்ணல் கொண்டுவந்த 'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானத்தை, காங்கிரசு அரசு ஆதரித்ததா என்றால், அதுதான் இல்லை. காங்கிரசு உறுபபினர்களில் இரண்டொருவர் கிண்டலாகக்கூடப் பேசியுள்ளனர்.

தமிழைக் கற்று -- தமிழால் ஊர் அறியப்பட்ட அம்மையாரான குழந்தை அம்மாள் அவர்கள்,

> **"தமிழ்நாடு என்று பெயர் வைத்துவிட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்குமா? எல்லோரும் படித்துவிடுவார்களா? வறுமை நீங்குமா? வீடு வருமா? இது ஒரு சாதாரணப் பிர்ச்சினை"**

என்றெல்லாம் சட்டப் பேரவையில் கனல் தெறிக்கப் பேசியுள்ளார்கள்.

'மெட்ராஸ் ஸ்டேட்' என்ற பெயரை மாற்றி, 'தமிழ்நாடு' என்ற இயற்பெயரை இம்மாநிலத்துக்குச் சூட்டுவதைக் காங்கிரசுக் கட்சியினர் விரும்பவில்லை என்பதுடன் வெறுக்கவும் செய்தனர் என்பதற்கு, மேலே குறித்திருக்கின்ற அம்மையாரின் பேச்சே போதுமான சான்றாகும்.

அரங்கண்ணல் தீர்மானத்தை, காங்கிரசு அமைச்சரவை சார்பில் தொழிலமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் எதிர்த்தார். தமது எதிர்ப்புக்கு அவர் தந்திருக்கின்ற விளக்கம் இதுதான் :—

> "'மெட்ராஸ் ஸ்டேட்' என்று சொன்னால்தான் உலகத்திலேயே ஒரு கண்ணியம் இருக்கிறது; உலகத்திலே ஒரு மரியாதை இருக்கிறது"

என்றும்,

> "'தமிழ்நாடு' என்று கூறுவதால் எல்லோருக்கும் சந்தோஷமாகத்தானிருக்கிறது. அதே மாதிரி, 'மெட்ராஸ் ஸ்டேட்' என்று சொல்லும்போதும் சந்தோஷமாகத்தானிருக்கிறது. அப்படி இருந்துவருவதை எதற்காக இப்போது போய்க் கெடுக்கவேண்டும்? கான்ஸ்டிட்யூஷனில் இருக்கிறபடி இருக்கட்டும். இங்கு மட்டும் தமிழில் போய்க்கொண்டிருக்கட்டும்; வெளியார்கள், 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றே வைத்துக்கொண்டிருக்கலாம். ஆகவே, நாம் எடுத்திருக்கின்ற முடிவே நியாயமானது......கனம் அங்கத்தினர், தீர்மானத்தை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும்; இல்லாவிட்டால், அதை எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்"

என்றும் பதிலளித்தார்.

இதற்குப் பின்னர், எதிர்க் கட்சித் தலைவரான நெடுஞ்செழியன் அவர்கள், கீழ்க்கண்ட விளக்கத்தைக் கூறிவிட்டு, மற்ற உறுப்பினர்களுடன் வெளிநடப்புச் செய்தார் :—

> "நாங்கள் எவ்வளவோ விளக்கங்களை வினயமாக எடுத்துச் சொல்லியும் -- பலமுறை வேண்டுகோள் விடுத்தும்--வற்புறுத்திக் கூறியும் -- அமைச்சரவையும் ஆளும் கட்சியும் திட்டவட்டமாக, 'ஏற்றுக்கொள்ளுவதற்கில்லை' என்று குறிப்பிட்ட காரணத்தால், எங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கவும், ஆளும் கட்சியின் போக்கைக் கண்டிக்கவும் வெளிநடப்புச் செய்வதைத் தவிர வேறு வழியில்லை."

தமிழ்நாடு பெயர் மாற்றத்தைப் பற்றிய மேலே குறித்திருக்கின்ற நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டுதான், 1967 சூலை 18-ம் நாள் தமிழ்நாடு சட்டப் பேரவையில், முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களால் கொண்டுவரப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டிருக்கின்ற 'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானத்தைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்பொழுதுதான், இப்பெயர் மாற்றத்திற்காக அறிஞர் அண்ணா அவர்கள், 'முதலமைச்சர்' என்ற நிலையில் நின்று எடுத்திருக்கின்ற முயற்சி எத்தகைய சிறப்பு வாய்ந்தது -- எந்த அளவுக்கு உயர்வாக மதிக்கத்தக்கது என்பதை ஒருவரால் உணர்ந்துகொள்ள முடியும்.

அறிஞர் அண்ணா அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 'தமிழ்நாடு' பெயர் மாற்றத்தைத் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள தமிழ் மக்கள் மகிழ்ச்சித் திருநாளாகக் கொண்டாட உள்ளனர். அக்கொண்டாட்டத்தில் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பங்குகொள்ளுவர் என்பது உறுதி.

—கா. க.

போலித் தொழில் நுட்ப அறிவு நமக்குத் தேவையில்லை!

பெங்களூர், நவ. 30—

"தொழில் நுட்ப அறிவை வெளிநாடுகளிலிருந்துவிலைக்கு வாங்குவதைவிட, சுதந்தரமாகச் சிந்திக்கும் கலையை நமது மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

"சொந்த அறிவுடன் நாம் சிந்திக்காவிட்டால் வளமிக்க இந்தியாவை நம்மால் உருவாக்க இயலாது.

"உண்மையான தொழில் நுட்ப அறிவையே நாம் பெற வேண்டும்; போலித் தொழில் நுட்ப அறிவைப் பெறக் கூடாது.

"நமக்கு அறிவு தேவைதான்; ஆனால் கடுமையாக உழைப்பதன் மூலமே அறிவைப் பெருக்கிக்கொள்ள வேண்டும்.

"உயர் படிப்பு ஆராய்ச்சித் துறையில் 'தன் கையே தனக்கு உதவி' என்ற கொள்கையைப் பின்பற்றுவது அவசியமாகும்; இந்தப் பாடம் நமது நாட்டின் வாழ்விலேயே காணோம்!

"விஞ்ஞானத்தின் உண்மைத் தத்துவத்தைக் கற்றுக்கொள்ள முயலாமலும், சுதந்தரமாகச் செய்யாமலும் நம் நாட்டு மக்கள் வெளிநாடுகளில படிப்பதற்காகச் செல்லுகின்றனர்; இதற்குஊக்கமளிக்கக்கூடாது.

"தொழில் துறையில் நம்முடன் இணைந்து பணியாற்றும் வெளிநாட்டுக்காரர்கள் பணத்தைப் பெற்றுக்கொண்டு நமக்குப் பொருளின் தத்துவத்தைக் கற்றுத்தந்தாலும், உண்மையான தொழில் நுட்ப அறிவை நமக்குக் கற்றுத் தருவதில்லை; அவர்கள் அதை இரகசியமாகவே மூடி மறைத்து வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

"மின் விளக்குகளில் உள்ள உலோகக் கம்பியை இந்தியா தயாரிக்கிறதா?-- ஒரு கெசம் கூட தயாரிக்க இயலவில்லை; அனைத்தையும் இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது.

"இந்த நாட்டில், 'தொழிற்சாலைகள்' என்று சொல்வதெல்லாம் கேலிக்கூத்து! இறக்குமதியை நாம் நிறுத்திவிட்டால், 'இந்தியத் தொழில் மயமாக்குதல்' என்ற நீர்க்குமிழி வெடித்துவிடும்!

"உழைத்துப் பாடுபட்டுத் தொழில் நுணுக்கங்களைக் கற்றுக்கொள்வதற்குப் பதில், 'விரைவில் பணக்காரர்களாக வேண்டும்' என்று நமது தொழில் அதிபர்கள் முனைவதாலேயே நாம் இந்தக்கதிக்கு வந்திருக்கிறோம்!"

--- டாக்டர் சி. வி. இராமன்

(கருத்தரங்கு ஒன்றில்)

குணத்தை வைத்துத்தான் தகுதியை மதிப்பிடுவர்

சமூகம் மீண்டும் திருத்தியமைக்கப்படும்போது அதில் முன்பு இருந்த நெறிகள் மாறிவிடுகின்றன; சொத்து, தகுதி போன்றவற்றுக்கு அங்கே இடமிருக்காது; குணத்தை வைத்துத்தான் தகுதியை மதிப்பிடுவார்கள்; குறுகிய நோக்கு கொண்ட சமயமும், நியாயத்துக்கு இசையாத சமயமும் அப்போது உயிர்வாழ முடியாமல் போய்விடும்!

—காந்தியார்

ஐந்து மாவட்டங்களில் ஏழு நாட்கள் -- (10)

[எஸ். ஆர்.]

அண்ணு கண்ட அமைதிப் படை !-- சீரணி பற்றிச் சில கருத்துக்கள்!

எளிய கஞ்சியோ -- ஆடம்பர விருந்தோ -- 'உப்பு', இந்த இரண்டு இடங்களிலும் வருகிறது. ஆசையைக் காட்ட -- அன்பைப் பெற, 'இன்னும் கொஞ்சம் போடுங்கள் -- இதையும் சாப்பிடுங்கள்' என்று வார்த்தைகளைப் பரிமாறிக்கொண்டு மற்ற பொருள்களை இலையில் வைப்பதைப்போல், 'உப்பு' பயன்படுவது கிடையாது என்பது உண்மைதான்; ஆனல், ஆயிரக்கணக்கில் செலவழித்துத் தயாரித்த விருந்தென்ருலும், அங்கே 'உப்பு' மறைந்திருக்கிறது என்ருல், பண்டங்கள் பாழ் -- உபசரிப்பு வீண்! கலயத்தில் இருக்கும் கஞ்சி -- மாளிகையில் தெரியும் ஆடம்பர உணவு ஆகிய இரண்டுக்கும் உப்பின் தரம் -- உபயோகம் ஒன்றுதான்!

சில இலட்சங்களைச் செலவழித்துத் தயாரிக்கும் பெரிய திட்டங்கள் -- பல ஆயிரங்களைக்கொண்டு நிறைவேற்றிய பொதுப் பணிகள் ஆகிய இரண்டிலும் சீரணியின் பங்கு, உப்பின் ஈடுபாட்டினைப் போல் ஓரளவு -- ஆனல் உபயோகம் உணரப்படும் அளவுக்கு இருந்ததனை, செய்தியாளர்கள் குழு மேற்கொண்ட ஏழு நாள் பயணத்தில் ஆங்காங்கே தெரிந்துகொளள நேர்ந்தது.

அன்பினைக் காட்ட வேண்டுமென்ருல், பயன்படுத்தப்படும் 'நெய்', அளவில் கூடவேண்டும். பண்டம் உரிய ருசிபெற வேண்டுமானல், உப்பினைப் பொறுத்தமட்டில் அளவு கூடவும் கூடாது -- குறையவும் கூடாது!

தத்துவத்தால் முக்கியத்துவம் பெறும் நடைமுறைகள் -- புள்ளிவிவரங்களினல் பரவலாக அறிமுகமாகும் திட்டங்கள் இருக்கக் காண்கிருேம்.

சீரணியினைப் பொறுத்த மட்டில், அது உள்ளடக்கிய கோட்பாடுதான் முக்கியம். சீரணி ஆற்றிய பணிகள் இவை இவை என்ற பெரிய புள்ளி விவரங்களோ, 'சீரணியின் சிறப்பு இவ்வளவுதானு' என்ற உதட்டுப் பிதுக்கலோ இரண்டுமே சரியானதல்ல!

இந்த அடிப்படையில்தான், பயணத்தின் துவக்கத்தில் சீரணித் தனி அதிகாரியினல் தரப்பட்ட ஒரு புள்ளிவிவரப் பட்டியல் செய்தியாளர்களுக்குத் தரப்பட்டபோது நான் சிந்தித்தேன்.

சீரணியின் பணி -- கோட்பாடு, உப்பின் உபயோகத்தினைப் போன்றதாகையால், அதன் நடைமுறைகளை அணுகும் எந்தச் செய்தியாளரும் அல்லது பொது மனிதரும் புள்ளிவிவரம் தரும் பெரிய பட்டியலைக் கொண்டோ, அல்லது, 'பெரிய புள்ளிவிவரங்களைக் காணேமே' என்ருே மதிப்பிடுவது முறையாகாது!

உப்பு அளவோடுதான் இருக்கும்; அளவோடு இருக்கும் வரை அது இருப்பதுகூட நம்மால் உணரப்படாமல்தான் இருக்கும்; இருக்கவேண்டிய அளவுக்குமேல் இருந்தாலோ அல்லது குறைந்து இருந்தாலோதான் முகச் சுளிப்பு ஏற்படும்!

நாங்கள் பார்த்த ஐந்து மாவட்டங்களைப் பொறுத்த வரையில், சீரணியின் பணி, இருக்கவேண்டிய அளவுக்கு இருக்கிறது! இல்லாத அளவுக்கும் இல்லை -- பொல்லாத அளவுக்கும் போய்விடவில்லை!

அண்ணு என்னும் சமையற்காரர், தமது தயாரிப்பில் அளவறிந்து கலந்திருக்கும் அடிப்படைப் பொருள்தான் தமிழகத்தின் சீரணி!

இரவல் விருந்தென்ருல், அது எப்படி நிறைவுடையதாக இருந்தாலும், சாப்பிடுவதற்கு முன்னதாக அல்ல — சாப்பிட்ட பின்னர் (!) -- 'இதில் இது இன்னும் கொஞ்சம் அதிகம் போட்டிருக்கலாம்; அதில் அதை இன்னும் கொஞ்சம் குறைத்திருக்கலாம்' எனக் குற்றம் காண்பதைக் குணமாகக் கொண்டவர்களைப் போலத்தான், கழக அரசு தந்திருக்கும் சமுதாய விருந்தான சீரணியினைப் பற்றிய குற்றங்குறைகள் -- விமர்சனக் கருத்துரைகள்!

ஆண்டொன்றுக்குச் சுமார் பத்து இலட்சம் ரூபாய்கள் அரசாங்கப் பொறுப்பிலிருந்து! அதனை விட மேலாக ஆங்காங்கிருந்து ஊதியமின்றி -- தன்னலம் கருதாது பொதுநலம் பேணி -- ஓய்வு நேரங்களில் சமுதாயப் பணி செய்வதற்குத் தாமே முன்வரும் ஆடவர் -- பெண்டிர்! இதுதான், அறிஞர் அண்ணு அவர்கள், தமது சிந்தனையின் மூலம் ஈன்றெடுத்து, 1967-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 16-ம் நாள் துவக்கிய சீரணியின் பொதுவான சிறப்பு!

'கழக வாடைதான் வீசும்' என்ருே, அல்லது 'கழகத்துக்குப் பக்கபலமாக இருக்கத்தான் உதவும்' என்ருே எடுத்த எடுப்பிலேயே -- கண்ணுடிக்கு ஏற்ற பார்வை என்ற போக்கில் -- குறை காணும் போக்கினர், வட ஆற்காடு, கோவை, நீலகிரி ஆகிய மாவட்டங்களுக்குச் சிறிது நேரம் 'கற்பனைத் தேரில்' ஏறிவர வேண்டும்.

வேலூருக்குச் சில கல் தொலைவில் பாலமதி என்ருெரு மலை; 1840 அடி உயரம்; அங்கே ஒரு கிராமம்; கீழே மலையைச் சுற்றிலும் சிற்றூர்கள் -- ஓரிரு பேரூர்கள்; அனைத்தையும் இணைக்கும் -- பாதையின் தூரத்தைக் குறைக்கும் மலைப் பாதை ஒன்று ரூ. 23,84,000 செலவில் உருவாகிவருகிறது அங்கு; அதில் சீரணியினரின் சிறிய பங்கும் இருக்கிறது; காலத்துக்கும் நினைவில் இருக்கும் பணி -- கருத்துக்கு உயர்வளிக்கும் கடமை உணர்வு -- இரண்டும் அங்கே காணப்பட்டன!

கோவையை அடுத்த முத்திப்பாளையம் என்ருெரு கிராமம்; ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் பாழடைந்த ஒரு குளம்; அதனைச் சீர்படுத்தி, பொது நன்மைக்குக் கொண்டுவரும் சீரணியின் தொடக்க விழா, எங்கள் செய்தியாளர் ஒருவராலேயே துவக்கிவைக்கப்பட்டது.

மூன்ருவதாக மற்ருெரு வகை; பலதரத்தவர் வந்து போகும் மலைவாழிடம் ஊட்டி; அங்கு நடுத்தர -- உயர்தர மக்கள், விளையாட்டுகளுக்கும் பொழுதுபோக்குக்கும் பயன்படுத்தும் அரங்கம் ஒன்று ஐந்து இலட்சம் ரூபாய் செலவில் நகர விளையாட்டுக் குழுவினரால் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது; அதிலும் சீரணியினர் தாங்களாகவே முன்வந்து, தங்கள் சிறிய உதவியினை உழைப்பாக நல்கியிருக்கின்றனர்!

உதாரணத்துக்காக மட்டுமே வகைக்கு ஒன்ருக மேற்கண்ட மூன்றினைத் தந்திருக்கிறேன். ஐந்து மாவட்டங்களில் ஏழு நாட்களாக நாங்கள் பார்க்க நேர்ந்த பள்ளிக் கட்டிடம் -- அங்கே சுவர்களில் பொறிக்கப்பட்டிருந்த குறள்கள், பாதைகள் அமைத்தல் -- பொது வாய்க்கால்களைச் சீர்படுத்துதல் போன்ற சீரணிப் பணிகள், சமுதாய நலத்தைப் பேணிக்கொண்டிருக்கின்றன!

இதில் கழக வாடை எங்கே? -- 'கழகத்துக்குத்தான் பக்கபலம்' என்ற வாதத்துக்கு இடமெங்கே? -- என்பவைகளைத் துருவித் துருவிப் பார்த்தும் புலப்படவில்லை!

'நீங்களெல்லாம் கழகத்துக்காரர்களா? உங்களுக்குக் கூலி உண்டா? நீங்கள் செய்யும் வேலை உண்மையில் ஊருக்குப் பயன்படுவதுதானு?' என்பன போன்ற கேள்விகளை எங்கள் குழுவில் வந்த ஓரிரு சாமர்த்திய நிருபர்கள்' ஆங்காங்கே இருந்த சீரணியினரில் சிலரைத் தனியாகக்கூட அழைத்துக் கேட்டதையும் என்னல் கவனிக்க முடிந்தது; ஆனல், அதுபோன்ற 'விசாரணை'யிலும் கிடைத்த பதில், 'கழகத்துக்கும் சீரணிக்கும் எவ்விதத் தொடர்புமில்லை; சீரணி ஆற்றுவது, முழுக்க முழுக்கச் சமுதாயப் பணியே' என்பதுதான்!

மக்கள் பலத்தை மயிரிழையில் ஒட்டவைத்துக் கொண்டு ஆளும் கட்சியல்ல தி.மு.க.! அல்லது இனிதான் சீரணி போன்ற அமைப்புக்களின் மூலம் பலத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்ற நிலையிலும் இல்லை கழக அமைச்சரவை!

139 சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தமிழக ஆளும் கட்சிக்குப் பல ஆயிரக்கணக்கான கிளைகளும், இலட்சக்கணக்கான உறுப்பினர்களும் உண்டு. இந்த இரண்டின் மூலம் கிடைக்காத பலம் சீரணியின் மூலம் கிட்டிவிடாது!

"சீரணி நூற்றுக்கு நூறு சமுதாயத்துக்குத்தான்; அதன் பணி முழுக்க முழுக்கப் பொது நோக்கத்துக்குத்தான்" என்ற அடிப்படைக் கோட்பாட்டினை மக்கள் சார்பாகச் செய்தியாளர்கள் உணரும் ஒரு வாய்ப்பு எங்கள் குழுவுக்கு ஐந்து மாவட்டங்களிலும் கிடைத்தது!

ஆளும் கட்சி ஏற்படுத்தும் இதுபோன்ற அரசாங்கச் சார்பற்ற அமைப்புக்கள், சிலர் -- பலரால் அரசியல் கண்கொண்டு மட்டுமே பார்க்கப்படுவது புதிது அல்ல! 'உலகம் முழுவதும் பணியாற்ற' என்ற உயரிய கோட்பாட்டுக்காகக் கோடிக்கணக்கான டாலர்கள் செலவழித்து இயங்கிவந்த கென்னடியின் 'அமைதிக் குழு'கூட, பல நாடுகளில் பலதரப்பட்ட மக்களால் கண்டனத்துக்கும், கடுமையான விமர்சனங்களுக்கும் ஆளாக நேர்ந்தது என்பதனை இங்கு நினைவு கூர்வது பொருந்தும்!

பல நாடுகளைத் தொடர்புப்படுத்தி -- அங்கே உள்ள அமெரிக்க உதவிக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வரவேண்டிய 'அமைதிக் குழு' பற்றியாவது இரு வகையான கருத்துக்கள் எழ நியாயமுண்டு.

ஆனல், தமிழகத்துக்குள்ளே -- ஆங்காங்கே உள்ள வட்டாரத் தேவைகளை நிறைவேற்ற அரசியல் நோக்கம் எழ ஆதாரமே இல்லாத நிலையில் -- கூடிப் பணிபுரியும் சீரணியினரின் நோக்கம் பற்றிக் காங்கிரசு உட்பட ஒரு சில தரப்பினர் தரும் மாற்றுக் கருத்துக்கள், 'வாதத்துக்கும் பொருந்தாது' என்ற விளக்கம், இந்தச் சுற்றுப் பயணத்தின் மூலம் எங்களுக்குக் கிடைத்தது!

'சீரணி'யின் அமைப்பு முறைகள் பற்றியும் ஒரு சில இங்கு கூறுவது பயனுடையதாக அமையும் என நம்புகிறேன்.

(4-ம் பக்கம் பார்க்க)

மேச்சேரி சரகம் இரண்டாவது கட்ட பள்ளிச் சீரமைப்பு மாநாடு

கல்வி வளர்ச்சியில் பொதுமக்கள் காட்டும் அக்கறை

அமைச்சர் நெடுஞ்செழியன் மகிழ்ச்சியும் பாராட்டும்

மேச்சேரி கல்விச்சரகத்தைச் சேர்ந்த மேச்சேரி, பொட்டனேரி, வெள்ளாறு, பாரக்கல்லூர், ஜலகண்டபுரம் ஆகிய ஆசிரிய அவைகளின் சார்பில் 2-வது கட்ட பள்ளிச் சீரமைப்பு மாநாடு 19-11-68 அன்று மேச்சேரி முத்தமிழ்த் திரையரங்கில் நடைபெற்றது.

மேச்சேரி, நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியங்களைச் சேர்ந்த 85 துவக்கப் பள்ளிகளும், 5 உயர்நிலைப் பள்ளிகளும் கலந்துகொண்டன.

தாரமங்கலம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே. ஆர். கோவிந்தன் தலைமை வகித்தார்.

புக்கம்பட்டி ஊராட்சிமன்றத் தலைவர் திரு. பி. என் வெங்கடாசலம் கொடியேற்றினர்.

மல்லிகுந்தம் ஆசிரியர் திரு. இராமாநுசம் இறைவணக்கம் பாடினர்.

மேச்சேரி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. ஆர். நாராயணன் வரவேற்புரை நிகழ்த்தினர்.

உயர்நிலைப் பள்ளிகளின் சார்பில் மேச்சேரி உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் திரு. ஏ. வேலப்பன் வரவேற்பிதழ் வாசித்தளித்தார்.

தமிழக அரசு தலைமைக் கல்வி ஆலோசகர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அனுப்பிய வாழ்த்துச் செய்தியை சங்ககிரி மாவட்டக் கல்வி அதிகாரி திரு. த. பி ஜீவண்ண ராவ் வாசித்தார்.

மேச்சேரி அரசுப் பள்ளித் துணை ஆய்வாளர் திரு. ஏ. நடராசன் மாநாட்டு அறிக்கையை வாசித்தார்.

திருவள்ளுவர் படத்தை திரு. டி. என். திருப்பதி அவர்களும், காந்தியார் படத்தை திரு. என். அன்னையன் அவர்களும், முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்களின் படத்தை திரு. பெருமாள் அவர்களும் திறந்துவைத்தனர்.

மாநாட்டுக் கண்காட்சியை கல்வி அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் திறந்துவைத்தார்.

தூய்மைத் திட்டக் கண்காட்சியை மேச்சேரி பேரூராட்சித் தலைவர் திரு. வையாபுரி திறந்து வைத்தார்.

கல்விக் கண்காட்சியை நங்கவள்ளி ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு. என். சுப்பராயன் திறந்துவைத்தார்.

நிலக் கொடை

பள்ளிக் கட்டிடங்களுக்கும், தோட்டம் -- விளையாடும் இடம் முதலியவைகளுக்கும் ரூ. 17,800 மதிப்புள்ள 247 செண்ட் பட்டா நிலத்திற்கான பத்திரங்களும், ரூ. 1,02,427 மதிப்புள்ள பள்ளிக் கட்டடங்களுக்கான பத்திரங்களும் பெருமக்களால் அமைச்சரிடம் வழங்கப்பட்டன.

மாநாட்டுத் தலைவர் கே. ஆர். கோவிந்தன், குள்ளமுடையனூர் நண்பகல் உணவு மையத்திற்கு ரூ. 100 நன்கொடையாக அமைச்சரிடம் வழங்கினர். மேலும் ரூ. 5,004 மதிப்புள்ள பாத்திரங்களும், பொதுமக்களால் நண்பகல் உணவுத் திட்டத்திற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

ஆசிரியர்களுக்குச் சீருடை

ஆசிரியர்களின் சேவையைப் பாராட்டி சிந்தாமணியூர் திரு. டி. என். திருப்பதி ரூ. 75 மதிப்புள்ள ஆசிரியர் சீருடையை சிந்தாமணியூர் தலைமை ஆசிரியர் வெங்கட்ரமணனுக்கும், சூரப்பள்ளி ஊராட்சித் தலைவர் திரு. வி. மாரியப்பன், அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. வி. சீனிவாசன் அவர்களுக்கு ரூ. 60 மதிப்புள்ள சீருடையையும், நங்கவள்ளி ஊராட்சிப் பெருந்தலைவர் திரு. என். சுப்பராயன், ரூ. 60 மதிப்புள்ள சீருடையை திருமதி இராசம்மாளுக்கும் நன்கொடையாக அமைச்சரிடம் வழங்கினர்.

ஏழைச் சிறுவர்கட்குச் சீருடை

'கேர்' நிலைய காலி துணிப் பைகள் மூலம் ரூ. 3,000 மதிப்புள்ள 300 செட் சீருடைகளும் ஆசிரியர்களுடைய சொந்தச் செலவினல் உருவாக்கப்பட்டன.

ரூ. 46,156 மதிப்புள்ள 4,494 செட் சீருடைகள் பெற்ருேர்களால் குழந்தைகளுக்குத் தைத்து வழங்கப்பட்டன.

ஆசிரியர்களுக்கான இலவசச் சீருடைகளை அமைச்சர் மகிழ்ச்சியுடன் பெற்று, ஆசிரியர்களுக்கு வழங்கினர்.

பள்ளிக் குழந்தைகளுக்கு ரூ. 210 மதிப்புள்ள 25 செட் சீருடைகளை திருமதி கே. இராசம்மாளும், திரு. ஜே. ஆர். சுப்பிரமணியமும், திரு. ஆர். அய்யந்துரையும், திரு. தை. தங்கவேலும், மலையம்பாளையம் திரு. விசுவநாதனும், வெள்ளார் திரு. காசி விசுவநாதனும் இலவசமாக ஏழைக் குழந்தைகளுக்குத் தைத்துக் கொடுத்ததை சேலம் — தருமபுரி மாவட்டத் தலைமைக் கல்வி அதிகாரி திரு. எம். சுல்தான் மொகிதீன் பி.ஏ.எல்.டி. வழங்கினர்.

இலவசச் சிலேட்டுப் புத்தகங்கள்

ஏழைக் குழந்தைகளுக்கு அமரத்தானூர் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. நடேசன் சிலேட்டுகளும், மல்லிகுந்தம் தலைமை ஆசிரியர் திரு. கே. அருணசலம் ரூ. 10 மதிப்புள்ள புத்தகம், சிலேட்டுகளும் ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக வழங்கினர்; இவற்றை எம். பள்ளிப்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் திரு. சண்முகம் பி.ஏ. பி.எல். அவர்கள், குழந்தைகளுக்கு வழங்கினர்.

பள்ளிகளின் முன்னேற்றத்திற்காகப் பொதுமக்களால் வழங்கப்பட்ட மேற்குறிப்பிட்ட நன்கொடைப் பொருட்களின் மொத்த மதிப்பு ரூ. 1,95,534 ஆகும்.

இப்பொருட்களை அமைச்சர் மகிழ்ச்சியுடன் பெற்றுப் பள்ளிகளுக்கு வழங்கினர்.

நன்கொடை வழங்கிய பெற்ருேர்களையும், பொதுமக்களையும், ஆசிரியர்களையும் அமைச்சர் பாராட்டிப் பேசினர்.

மேச்சேரி வட்டார ஆசிரியர் கூட்டணியின் சார்பில் அமைச்சருக்கு வரவேற்பிதழ் வாசித்து மாலை அணிவிக்கப்பட்டது.

மேச்சேரி சரகக் கல்வி அதிகாரி திரு. ஏ. நடராசன் நன்றி கூறினர்.

நத்தைக் காய்ச்சல்

அமெரிக்கப் பல்கலைக் கழகத்தில் ஆராய்ச்சி

'ஷிஸ்டோசோமியாசிஸ்' என்பது ஒரு நோய். பெயர், வாயில் நுழைவதற்குக் கடினமாக இருக்கும். இதனைப் பற்றி அமெரிக்கப் பல்கலைக் கழகம் ஒன்று மிகத் தீவிர ஆராய்ச்சி செய்கிறது. உலகின் வெப்பப் பகுதிகளிலும், மித வெப்பப் பகுதிகளிலும் இந்த நோய் பெரிய சுகாதாரப் பிரச்சினையாகியுள்ளது.

'நத்தைக் காய்ச்சல்' என்று சாதாரணமாக இந்த நோயைப் பற்றிக் கூறுவதுண்டு; 15 கோடிப் பேருக்கு இந்தக் காய்ச்சல் வருகிறது' என்று உலக சுகாதார நிலையம் கூறுகிறது.

நோய்க்குக் காரணம் இரத்தம் உறிஞ்சும் ஒட்டுண்ணிப் புழு. இது ஒரு நத்தையில் புகுந்துகொண்டு வளருகிறது. நத்தை, தண்ணீரில் இப்புழுவின் முட்டைகளை விட்டு விடுகிறது; தண்ணீரை மனிதன் பயன்படுத்தும்போது இந்த நோய் அவனுக்கு வருகிறது.

சென்னையில்

'தமிழ்நாடு' மகிழ்ச்சி விழா

1—12—68 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு
மவுண்ட்ரோடு சிறுவர் அரங்கில்

தலைவர்: **ம. பொ. சிவஞானம்** எம்.எல்.ஏ.

பேசுவோர்: முதலமைச்சர்

அறிஞர் அண்ணா

பொதுப்பணி அமைச்சர்

மு. கருணாநிதி

சி. பா. ஆதித்தனார்

அனைவரும் வாரீர்!

—விழாக் குழுவினர்

அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

டிச. 1 காலை 10-மணி: துத்தம் பட்டி—ஊராட்சி ஒன்றியத் துவக்கப் பள்ளிக் கட்டிடத் துவக்க விழா; பகல் 12-மணி: தண்டா—காடுகளைப் பார்வையிடல்; மாலை 4-30 மணி: மெச்சேரி—தாராமங்கலம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏற்பாடு செய்திருக்கின்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

டிச. 2 காலை 8-45 மணி: பெரியநாயக்கன்பாளையம்—'டெக்ஸ்மோ' விவசாயப் பண்ணையைப் பார்வையிடல்; 10 மணி: கோயம்புத்தூர்—அமெரிக்க சமாதானக் குழு (விவசாய)த் தொண்டர்களின் கூட்டத்தில் கலந்துகொள்ளல்; மாலை 4-மணி: மலிவு வீடு கட்டுவதற்கான பயிற்சிக்கூடத் திறப்பு விழா; 5-மணி: சூலூர்—அகில இந்திய வானொலி திருச்சி கிளையினரால் ஏற்பாடு செய்திருக்கும் கிராம வானொலி மன்றங்களின் ஒன்பதாவது ஆண்டு விழாவையொட்டி நடைபெறும் பரிசளிப்பு விழாவிற்குத் தலைமை தாங்குதல்.

டிச. 3 காலை 9-மணி முதல்: தேனி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏற்பாடு செய்திருக்கின்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

சென்னை 19-வது வட்ட வியாபாரிகள் கூட்டம்

மேயர் கலந்துகொள்வார்

"சென்னை 19-வது வட்ட வியாபாரப் பெருமக்களின் ஆலோசனைக் கூட்டம் 1—12—68 காலை 9-மணிக்கு டேவிட்சன் தெரு, 18 எண்ணுள்ள மாநகராட்சிப் பள்ளியில் நடைபெறும்; அதுபோது மேயர் வேலூர் நாராயணன், முன்னாள் மேயர் வி. முனுசாமி ஆகியோரும் கலந்துகொள்வர்" என்று ந. செயராமன் எம்.சி. அறிவிக்கிறார்.

வானொலியில் மேயர்

சென்னை, நவ. 30—

சென்னை மேயர் திரு. வேலூர் நாராயணன் அவர்கள் நாளை மாலை 6-30 மணிக்கு, 'நம் தலைநகரை அழகுபடுத்துவோம்' என்ற தலைப்பில் சென்னை வானொலியில் பேசுகிறார்.

ஆண்மைக்கு அழகு!

தண்டனை கொடுப்பதைவிட மன்னித்துவிடுவதுதான் ஆண்மைக்கு அழகு!

—காந்தியார்

ஏடு காணாத விழா நிகழ்ச்சிகள்

பொதுச் செயலாளர் பேரறிஞர் அண்ணா அவர்கள் விடுத்த அறிக்கையினையொட்டி நாளை தமிழகத்தின், தலைநகர் முதல் பட்டிதொட்டிகள் வரை, ஊர்தோறும் தமிழ்நாடு பெயர் சூட்டிய மகிழ்ச்சி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட விருக்கிறது.

ஆங்காங்கே, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விழாப் பொதுக் கூட்டங்கள்--இசையரங்குகள்-கலை நிகழ்ச்சிகள் --- இனிப்பு வழங்குதல் -- கொடியேற்றுதல் முதலிய நிகழ்ச்சிகள் பற்றிய செய்திகள் ஏராளமாக வந்து குவிந்த வண்ணமுள்ளன. அவை அனைத்தையும் வெளியிடுவதென்றால் இந்த ஏடு காணாது.

சுருக்கமாக வெளியிடுவதற்குக் கூட ஏடு இடங்கொடுக்காத காரணத்தால் அனைத்தையுமே நிறுத்திவைத்து விட்டோம்.

விழா முடிந்ததும், எல்லா நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து வெளியிடுவோம். செய்தியனுப்பிய தோழர்கள் பொறுத்தருள்க.

உள்ளாட்சித்துறை அமைச்சர்

மா. முத்துசாமி

சுற்றுப்பயணம்

டிச. 1 மாலை 4-மணி: ஒருவந்தூர் ஊராட்சி வரவேற்பு; 5-மணி: அணியாபுரம் — உயர்நிலைப் பள்ளி விழா; இரவு 7-மணி: கரூர்—'தமிழ்நாடு' பெயர் மாற்ற வெற்றி விழா.

டிச. 2 காலை 11-மணி: கண்ணம்பாளையம்--அமெரிக்க அமைதிப் பணி ஊழியர் மாநாடு; மாலை 5-மணி: சூலூர்—கிராமிய வானொலி கருத்தரங்கு; இரவு 7-30 மணி: சூலூர் பொதுமக்கள் வரவேற்பு.

டிச. 3 காலை 9-மணி: சுல்தான் பேட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டிடத் திறப்பு விழா; மாலை 3-30 மணி முதல் இரவு 7-30 மணி வரை: ஈ. எம். நடராசன் எம்.எல்.ஏ. அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளல்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சீரணி உறுப்பினர்கள், தங்கள் உழைப்பினைத் தான் ஊதியம் ஏதும் இல்லாமல் நல்கவேண்டுமே தவிர, அமைப்பினை மேலும் வரைமுறைகளோடு இயக்குவதற்கு நிதி தேவைப்படும் நிலையில்தான் இருப்பதாகத் தெரிகிறது. உதாரணமாக பல இடங்களில் அவர்களுக்கான சீருடை, தயாரற்ற நிலையில் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது

இதுபோன்ற அமைப்புகளுக்கு, 'வெளிக் கவர்ச்சி' அடிப்படைத் தேவையாகும். பணியாற்றும் நேரங்களிலும் சரி -- பயிற்சி பெறும் காலங்களிலும் சரி -- சீருடையில் அவர்களைக் காண்பது, மற்றவர்களின் மனத்தைக் கவருவதாக இருக்கும்; எனவே, 'சீருடை' பற்றிச் சீரணியின் தலைமை அமைப்பு, உடனடியாகக் கவனம் செலுத்துவது நல்லது.

'பொதுப் பணி' என்று மட்டுமல்ல -- ஊருக்குப் பொதுவான பல நிகழ்ச்சிகளில்கூடச் சீரணியினர் செயலாற்றுவது, மகிழ்ச்சிக்குரியது. எடுத்துக் காட்டாக, ஒரு சில இடங்களில் எங்கள் சுற்றுப்பயணக் குழுவே, சீரணியினரின் வணக்கம் கலந்த வரவேற்புக்கு இலக்காக இருந்தது!

மாவட்டங்களுக்கு இடையே சீரணித் தொண்டர்களுக்குள் நட்பு கலந்த தொடர்புகளை ஏற்படுத்தும் நடவடிக்கையிலும் தலைமையமைப்பு, பாலமாக இருந்து பயன்படுவது நல்லது. இப்போது இப்படிப்பட்ட தொடர்புகள் இருப்பதாகத் தெரியவில்லை. குறிப்பிட்ட இடைவெளிக் காலங்களில் எல்லா மாவட்ட அணிகளுமோ அல்லது சிற்சில மாவட்டங்கள் ஒவ்வொரு இடத்திலோ கூடி ஓரிரு நாட்களைக் கழிப்பதும், அந்த நேரத்தில் அவர்களுக்கிடையே பல கருத்துப் பரிமாற்றங்களை நிகழ்த்துவதும், மாநிலம் முழுவதற்குமான ஒருமைப்பாட்டினை, சீரணியினரிடையே உருவாக்கும்!

நிதி வசதிக்கேற்ப, தமிழகம் முழுவதற்கும் பொதுவான வார அல்லது மாத இதழ் ஒன்றினைச் சீரணி உறுப்பினர்களுக்காக நடத்துவது, அவர்களுக்குள் தொடர்பினை வளர்க்க மட்டுமல்ல -- சீரணியினரின் பணிகளைப் பிறருக்கும் பிற்காலத்துக்கும் உணர்த்துவதற்கு ஓர் அரிய சாதனமாகவும் அமையும்.

சீரணியில் உறுப்பினர்களாகச் சேர்ந்துள்ளவர்கள் பற்றித் தொழில் ரீதியின் ஒரு புள்ளிவிவரத்தினையும் மாநில -- மாவட்ட அமைப்புகள், இதுவரையில் இல்லாவிட்டாலும் இனியாவது தயாரிப்பது நல்லது; இது, பல்வேறு விவரங்களுக்குப் பயன்படுவதாக அமையும்.

கடைசியாக ஒன்று; அமைப்பின் பெயரைப்பற்றிய ஒரு பிரச்சினை; 'நம் நாடு' இதழ், ஏற்கனவே ஓரிரு முறைகள் இதுபற்றி விளக்கமும் வெளியிட்டிருக்கிறது.

'சீரணி', எழுத்திலும் பேச்சிலும் பரவலாக 'சீரணிப் படை' என்றே அழைக்கப்படுகிறது; எது சரி -- அல்லது எது அதிகமாகப் பொருந்தும் என்ற மொழி -- இலக்கண சர்ச்சைகளை ஒருபுறம் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால்கூட, 'படை' என்ற பிற்சேர்க்கை 'சீரணி'க்குத் தேவையில்லை. தலைமையமைப்பு மேற்கொள்ளும் அதிகாரபூர்வமான கடிதங்களில், 'சீரணி' என்றே குறிக்கப்பட்டிருந்தும், 'சீரணிப் படை' என்றே மற்றவர்களால் பேசப்பட்டும் எழுதப்பட்டும்வரும் ஒரு நிலையினை, உடனடியாக முடியாவிட்டாலும் தொடர்ந்த முயற்சியினாலாவது திருத்த சீரணித் தலைமையமைப்பு நடவடிக்கைகள் எடுப்பது தேவையாக இருக்கிறது.

சமுதாய நலம் பேணும் ஒரு முன்மாதிரியான அமைப்பு, 'படை' என்ற மருட்சி தரும் சொல்லினை விகுதியாகப் பெறுவது ஒரு சிலருக்கு அடிப்படை நோக்கத்தைத் திரித்தும், மாறுபட்டும் பொருள்படும்படி நினைக்கவும், பேசவும் வைக்கிறது!

'சீரணி' என்ற அழகான சொல்லிலேயே 'அமைப்பு' என்னும் பொருளும் இருக்க, 'படை' என்ற பிற்சேர்க்கை, தேவையற்ற நிலையில் பயன்படுத்தப்படுவதனைத் திருத்தியமைக்க வேண்டும்.

வரிச் சுமையை மேலும் அதிகரிக்கும் யோசனைக்கு மாநில அரசுகள் எதிர்ப்பு

மத்திய அரசின் எதேச்சாதிகாரப் போக்குக்குக் கண்டனம்

தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் மாநிலப் பிரதிநிதிகள் மனக்குமுறல்

புதுடில்லி, நவ. 29—

திட்டக் குழு கூறியபடி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் புதிய வரிகள் மூலம் ரூ. 1,500 கோடிக்குக் கூடுதலாக நிதி வசதிகளைத் தங்களால் திரட்டமுடியாது என்று மாநில முதலமைச்சர்கள் தெளிவாகத் தெரிவித்து விட்டனர். விவசாய வருமான வரி விதிக்கும் யோசனைக்கும் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தேசிய வளர்ச்சிக் குழுவின் நிரந்தரக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட மாநில முதலமைச்சர்களும், மற்றப் பிரதிநிதிகளும், மாநிலங்களின் திட்டங்களுக்கு மத்திய அரசு கூடுதலாக நிதியுதவி அளிக்க வேண்டும் என்று கோரினர்.

விவசாய வருமான வரி மூலமாகவும், கிராமப்புறக் கடன் பத்திரங்கள் மூலமாகவும் ரூ. 1500 கோடிக்குப் புதிதாக நிதி வசதிகளை எழுப்ப வேண்டும் என்று திட்டக் குழு யோசனை கூறியிருந்தது; இரண்டு மாநிலங்கள் நீங்கலாக மற்றெல்லா மாநிலங்களின் பிரதிநிதிகளும், 'இந்த இலக்கு மிகவும் அதிகமானது' என்றும், 'எங்களுடைய சக்திக்கு அப்பாற்பட்டது' என்றும் கூறினர்.

கிராமச் சேமிப்புகளைத் திரட்டுவதற்கு விவசாய வருமான வரி விதிப்பது போன்ற யோசனைகளை அவர்கள் ஆதரிக்கவில்லை.

மாநிலங்களுக்கு மொத்த மத்திய உதவி ரூ. 3,500 கோடி என்று மத்திய அரசு நிர்மாணித்திருப்பதாகத் திட்டக் குழுவின் துணைத் தலைவர் டி. ஆர். காட்கில் அறிவித்திருந்தார்; தங்களுடன் ஆலோசனை நடத்தாமலேயே விருப்பப்படி மத்திய அரசு உதவித் தொகையை நிர்ணயித்திருப்பதாகக் காங்கிரசு மாநிலங்களைச் சேர்ந்தவர்களும், மற்ற மாநிலங்களைச் சேர்ந்தவர்களும் புகார் கூறினர்.

"மத்திய தொகையின் அளவு முன்னதாகவே நிர்ணயிக்கப்பட்டுவிட்டால், இத்தகைய கூட்டத்துக்கே அவசியமில்லை" என்று ஒரு முதலமைச்சர் கூறினார்.

பாதுகாப்புச் செலவைக் குறைக்கவேண்டும் என்றும் மத்திய அரசு செலவில் சிக்கனம் கையாளவேண்டும் என்றும், திட்டமிடுவது சம்பந்தமான கொள்கைகளை மாற்ற வேண்டும் என்றும் யோசனைகள் தெரிவிக்கப்பட்டன.

"பொதுத் துறைக்கான முதலீட்டில் மத்திய அரசு ரூ. 8,300 கோடியும், மாநிலங்கள் ரூ. 6,500 கோடியும் முதலீடு செய்யவேண்டும்" என்று திட்டக் குழு யோசனை கூறியிருப்பதாகத் தெரிகிறது.

மாநிலப் பிரதிநிதிகளில் பலர் இந்த ஒதுக்கீடுகள்பற்றி அதிருப்தி தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது. மொத்த மாநில முதலீடுகள் இன்னும் அதிகமாக இருக்கவேண்டும் என்றும், மத்திய முதலீடுகள் குறைவாக இருக்கவேண்டும் என்றும் யோசனை கூறியதாகத் தெரிகிறது.

அரசியல் கட்சிகளுக்கு அயல்நாட்டுப் பணம்!

விவரம் தெரிவிக்க வகை செய்ய வேண்டும்

நாடாளு மன்றத்தில் தனியார் மசோதா

புதுடில்லி, நவ. 29—

"அந்நிய நாட்டிலிருந்து தங்களுக்கு நன்கொடை ஏதும் வருமானால், அத்தகைய நிதி வரவுகளைக் குறித்த கணக்குகளையும் எந்தெந்த நடவடிக்கைகளுக்காக அந்த நிதி செலவிடப்பட்டது என்பது குறித்த விவரங்களும் எல்லா அரசியல் கட்சிகளாலும் கட்டாயம் அறிவிக்கப்பட வேண்டும்" என்பதற்கு வகை செய்யக்கூடிய தனியார் மசோதா ஒன்றை மது லிமாயி, மக்களவையில் கொண்டுவந்தார்.

"நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தனிக் குழு ஒன்றை அவைத் தலைவர் நியமிக்க வேண்டும்; இந்தியப் பொது வாழ்வில் அந்நியப் பணத்தால் எழக்கூடிய கேடுகளைத் தவிர்ப்பதற்கான சட்டம் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் குறித்து அரசுக்கு, அந்தத் தனிக் குழு பரிந்துரைக்க வேண்டும்" என்றும் மது லிமாயி கூறினார்.

டிசம்பர் முதல் நாள்

மகிழ்ச்சி விழாக் கூட்டங்கள்

கடலூர்	...	கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ. இரா. சாம்பசிவம் எம்.எல்.சி.
ஆம்பூர்	...	டி.கே.பொன்னுவேலுஎம்.எல்.சி. சைதை சம்பந்தம்